

திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் .கே.என்.நேரு நேற்று ( 01.10.2024) மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள கோ.ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளிக்கான முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், மாநகராட்சி ஆணையர் சரவணன மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, மண்டல மேலாளர் நாகராஜன், மத்திய மாவட்ட செயலாளர்வைரமணி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 26.09.2024 அன்று தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், மாட்சிமை தங்கிய மாமன்னர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கினார். உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### வேதாரண்யம் ஆற்காட்டுத்துறையில் பூங்காக்கள்

# மருதூரில் கிராம செயலக கட்டிடம்!

## அமைச்சர் எஸ். ரகுபதி திறந்து வைத்தார்! என். கௌதமன் பங்கேற்பு!

நாகை, அக். 2 -

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஆற்காட்டுத்துறையில் பூங்காக்கள் மற்றும் மருதூரில் கிராம செயலக கட்டிடத்தினையும் சட்டத்துறை (சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை, ஊழல் தடுப்புச் சட்டம்) அமைச்சர் எஸ். ரகுபதி திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான .என்.கௌதமன்; ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது, வேதாரண்யம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 41371 ஆகும். இந் நகராட்சி 21 வார்டுகளை கொண்டதாகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 36.26 சதுர கிலோ மீட்டராகும். இந்நகரா ட்சிக் குட்பட்ட வார்டு எண்.4 சுனாமி நகரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 20232024ன் கீழ் ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. இப்பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்கள், நடைபயிற்சி மேற்கொள்ள நடைபாதைகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் இப்பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், இப்பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 3000த்திற்கும் மேற்பட்ட மீனவ பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் குழந்தைகள் இந்த பூங்காவினால் பயனடைவார்கள்.

மேலும் வார்டு எண்:36 பெரியார் நகரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. இப்பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்கள் நடைபயிற்சி மேற்கொள்ள நடைபாதைகள் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் இப்பூங்கா அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், இப்பகுதிபைச் சுற்றியுள்ள சுமார் 5000த்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் குழந்தைகள் இந்த பூங்காவினால் பயனடையவர்.

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், மருதூர் தெற்கு ஊராட்சி திருவெண்காடு பகுதியில் செயல்பட்டு வரும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் மற்றும் கிராம நிர்வாக அலுவலக கட்டடம் பழுதடைந்து பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் இருந்ததால், புதிய கிராம செயலகம் கட்ட முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் படி ஆபுNசுநுபுளு திட்டம் ரூ 21,32,500 க்கும், 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (கி.ஊ) 202223 கீழ் ரூ.8,17,000க்கும், ஊராட்சி கணக்கு எண்2 ரூ.6,65,500க்கும், ஊராட்சி கணக்கு எண் 3 ரூ.6,50,000 க்கும் ஆகக்கூடுதல் ரூ.42,65,000 மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 1700 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. இதனை தொடர்ந்து ஊராட்சி பொதுமக்கள் (மக்கள் தொகை 4350) அனைவரும் பயன்பெறுவதற்கான உகந்த சூழல் ஏற்பட்டு, சிறப்பாக கட்டி முடிக்க ப்பட்டு இன்றைதினம் கிராம செயலக கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

அதனைதொடர்ந்து வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் இராசன்கட்டளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதிகலந்து கொண்டு கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், 24 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டையினையும் வழங்கினார். பின்னர் இராசன்கட்டளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளி வெள்ளி விழா நுழைவு வாயிலுக்கு அடிக்கல் நாட்டினார்.


இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் ரவிச்சந்திரன், வேதாரண்யம் நகர்மன்ற தலைவரும் நகர கழக செயலாளர் மா.ம மீ புகழேந்தி, ஒன்றிய கழக செயலாளர் உதயம் வே.முருகையன், என். சதாசிவம், மககுமார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்ஜெ.ரூபன் சங்கர் ராஜ், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் கா.சே.சுபாஷினி, வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் . எஸ்.திருமால், வேதாரண்யம் வட்டாட்சியர் .இரா. திலகா, மருதூர் ஊராட்சி மன்ற தலைவர் .வீ.பழனிசாமி மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2021 –2022 ஆண்டு நிதியில் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 28ல் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலக கட்டிடத்தை திறந்து வைத்து நூலகத்திற்கு புத்தகங்களை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வழங்கினார். இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், மாநகராட்சியின் துணை மேயர் லியாக்கத் அலி, மாமன்ற உறுப்பினர். எட்வர்டு சந்தோஷ்நாதன், வட்ட கழகச் செயலாளர் ரவிச்சந்திரன், கழக நிர்வாகிகள் மணிவேலன், பிரேம் ஆணந்த், பால்ராஜ் உள்ளிட்டோரும், அரசுத்துறை அதிகாரிகள், கழக உடன்பிறப்புகள் பலரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரபாண்டி ஆ. இராஜா
### அக்டோபர் 2 (2021)



**தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.

### தி.மு.க. பவள விழாவையொட்டி

# முத்தியால்பேட்டை தி.மு.க. சார்பில் மாணவர்களுக்கு பரிசு!

## புதுச்சேரி – எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்!

புதுச்சேரி, அக். 2 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75-ஆம் ஆண்டு பவள விழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, முத்தியால்பேட்டை தொகுதி திமுக சார்பில், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 60 சதவீதத்திற்கும் மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரூ. 40 லட்சம் மதிப்பில் பரிசுகள் வழங்கும் விழா முத்தியால்பேட்டையில் உள்ள தனியார் திருமண நிலையத்தில் நடந்தது.

விழா ஏற்பாடுகளை செய்திருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் வரவேற்று பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், எல். சம்பத், முன்னாள் சபாநாயகர் பழநிராஜா, தொகுதி செயலாளர் சவுரிராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா விழாவிற்கு தலைமை தாங்கி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

அதில், 10-ஆம் வகுப்பு தேர்தல் முதல் பரிசாக மாணவி வர்ஷாவுக்கு ஆக்டிவா ஸ்கூட்டம், 2-ஆம் பரிசாக மாணவர் பிரசன்னாவுக்கு ஸ்கூட்டி, 3-ஆம் பரிசாக மோகனபிரசாத்திற்கு லேப்டாப் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வில் முதல் பரிசாக ஹேமலதாவுக்கு ஆக்டிவா ஸ்கூட்டர், 2-ஆம் பரிசாக மாணவர் அப்ரினுக்கு ஸ்கூட்டர், 3-ஆம் பரிசாக மாணவர் ரோகித்துக்கு லேப்டாப் வழங்கப்பட்டது. மேலும், 90, 80, 70, 60 சதவீத மதிப்பெண் பெற்ற 350 மாணவர்களுக்கு மிதிவண்டி, கிரைண்டர், மிக்சி என ரூ. 40 லட்சம் மதிப்பிலான பல்வேறு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில், திமுக தொகுதி அவைத்தலைவர் எழிலன், துணைச் செயலாளர்கள் ரவி, கலைவாணி, பொருளாளர் மூர்த்தி, பிரதிநிதிகள் தனசேகர், கணேசன், செயற்குழு உறுப்பினர்கள் வேணு, சண்முகம், வெங்கடேஷ், பலராமன், தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பிரபாகரன் எழிலன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜ்குமார், அசோக், மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் தங்கராசு, மாநில தொண்டரணி தலைவர் கோபிநாத், நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில்முருகன், மாநில சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் நவீன், பிரான்ஸ் மோகன், மக்கள் சேவை மையம் மதன்பாபு, துணை அமைப்பாளர்கள் சேகர், செல்வராசு, சிவக்குமார், சந்துரு, ரகுபதி, முன்னாள் மீனவர் அணி அமைப்பாளர் பூபதி, முன்னாள் மீனவர் அணி துணை அமைப்பாளர் நடராஜன், முன்னாள் சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் அல்போன்ஸ், தொகுதி நிர்வாகிகள் மனோகர் (எ) ஆறுமுகம், பிரகாஷ் (எ) குமரவேல், ஏகாம்பரம் காந்தி, சண்முகம், பாஸ்கர், சுகுமாறன், பாஸ்கரன், முருகன், வேலு, ரெமோ, நந்தகுமார், கார்த்திக் ராஜா, மோகன், ஜீவானந்தம், தினேஷ், பாலாஜி, சுப்புரு, சுந்தர்ராஜ், முருகன், பாபு, மகளிர் அணி நிர்வாகிகள் ராணி, தனம், சுந்தரி, அமேலோற்பவமேரி, இந்திரா, கவிதா, சுதா, லதா, அன்பரசி, ராஜேஸ்வரி, கலைச்செல்வி, விமலா, முனியம்மாள், செல்வி மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் சிறப்பாக செய்திருந்தார்.



புதுச்சேரி முத்தியால் பேட்டையில் தி.மு.க. பவள விழா மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா பரிசு வழங்கினார். நந்தா சரவணன் எம்.எல்.ஏ. வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.செந்தில்குமார், எல்.சம்பத் மற்றும் பழனி ராஜா, சவுரி ராஜன் பங்கேற்றனர்.

### தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம் - பேரூர்க் கழகத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15ஆவது பொதுத்தேர்தலில் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நம்பியூர் ஒன்றியம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட கே.சந்திரன், மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.கே.பழனியப்பன் - அந்தியூர் ஒன்றியம், அத்தாணி பேரூர் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.சுப்பிரமணியன் - தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம், காசிபாளையம் பேரூர் அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மகாதேவன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), மாவட்டப் பிரதிநிதி - அத்தாணி பேரூர் பொருளாளர் - காசிபாளையம் பேரூர் அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2024 அக்டோபர் 3 (வியாழக்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

பேரூர்க் கழக நிர்வாகப் பொறுப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் போட்டியிடுவோருக்கு வேட்பு மனுவில் முன்மொழிவோரும் - வழிமொழிவோரும், தொடர்புடைய பேரூர்க் கழகத்தில் அடங்கியுள்ள வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகியாகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு படிவங்களை மாவட்டக் கழகச் செயலாளரிடம் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடந்த பாரம்பரிய உணவு திருவிழாவை வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி துவக்கி வைத்தார், இதில் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயந்தி, மாவட்ட கவுன்சிலர் பிரியா பாண்டியன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பத்மநாபன்,கழக நிர்வாகிகள் வழக்கறிஞர் சிவசங்கர்,மணிகண்டன், கருணாநிதி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.